JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.409/2018
PW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாரியப்பன் | தாலுகா | நாமக்கல் |
| தந்தை பெயர் | சண்முகவேல் | தொழில் | மெக்கானிக் |
| கிராமம் | நாமக்கல் | வயது | 50 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 19.05.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.ஆஜரில்லை. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது நாமக்கல்லில் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என் உறவினர்கள். அசா.1 பொன்னுச்சாமி என் உறவினர். சாட்சி மாரியப்பன் என்பவரை தெரியும். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 2018,2019 வருடத்தில் இரவு 7 மணிக்கு வலசை பேருந்து நிலையத்திற்கு அருகே நானும், அசா.1 பொன்னுச்சாமியும் மது அருந்தி கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகள் கண்ணன் மற்றும் ராஜசேகர் அங்கு வந்து என்னை கூப்பிட்டு சத்தம் போட்டாகள். பின்னர் அங்கு இருவரும் சென்று விட்டனர். நானும், அசா.1ம் மது அருந்தி கொண்டிருந்தோம். பின்னர் அசா.1ம், நானும், இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது வாகனம் தடுமாறி கீழே விழுந்து விட்டது. எனக்கு காயம் ஏற்பட்டது. அசா.1க்கும் காயம் ஏற்பட்டது. போலிசார் என்னை இரண்டு நாட்கள் கழித்து விசாரித்தனர்.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

கடந்த 2018ம் வருடம் ஆஜர் எதிரிகள் மாலை 7 மணியளவில் ஒன்றாக வந்து அசா.1 பொன்னுசாமியை அடித்து காயப்படுத்தினார்கள் என்றால் இல்லை. போலிசார் விசாரணையின் போது கடந்த 8.07.2018 ம் தேதியன்று இரவு 7.00 மணியளவில் ஆஜர் எதிரிகளின் முன்விரோதம் காரணமாக அசா.1 ஐ பார்த்து பொது இடத்தில் வைத்து அசிங்கமாக

பேசினார்கள் என்றால் சரியல்ல, அசா.1 ஐ அடித்து காயப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. அசா.1 க்கு கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரிகளுக்கு பயந்து கொண்டு உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.409/2018
PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பொன்னுசாமி | தாலுகா | கடையநல்லுர் |
| தந்தை பெயர் | ராஜநாயக்கர் | தொழில் | மெக்கானிக் |
| கிராமம் | வலசை | வயது | 51 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 19.05.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.ஆஜரில்லை. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது வலசையில் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என் ஊர்க்காரர்கள் சாட்சி மாரியப்பன் என்பவரை தெரியும். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 2018ம் வருடம் இரவு 7மணிக்கு எங்கள் ஊர் பேருந்து நிலையத்திற்கு தெற்கே கம்பெனிக்கு அருகில் நானும், மாரியும் மது அருந்தி கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகள் அங்கு வந்து தேவுடியா மவனே என கெட்ட வார்த்தையால் பேசிஎதிரி ராஜசேகர் கம்பியை கொண்டு என் தலையில் அடித்து விட்டார். எதிரி கண்ணன் கம்பை கொண்டு என்னுடைய வலது கையில் அடித்ததில்வலது கை முறிந்து விட்டது. எதிரி சதீஷ் என்னுடைய முதுகில் கம்பை கொண்டு அடித்து விட்டார். எதிரி உதய குமார் மற்றும் வீரப்பெருமாள் என்னுடைய முதுகிலும், தொடையிலும் கம்பை கொண்டு அடித்தார்கள். எதிரி சதீஷ் தேவுடியா மவனே உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்றும் அரிவாளை கொண்டு வெட்ட வேண்டியது தானே ஏன் கம்பை கொண்டுஅடிக்கிறீர்கள் என சொன்னார்.

எனக்கு இரத்தம் அதிகமாக வந்ததால் மாரி என்னை கை தாங்கலாக ரோட்டிற்கு அழைத்து வந்து போக்கு ஆட்டோவில் என்னை என் வீட்டிற்கு அழைத்து வந்தார். என் மனைவி ஜோதியிடம் மாரி நடந்த விவரத்தை கூறினார். என் மனைவி ஆட்டோ மூலம் என்னை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். நான் சிகிச்சையில் இருந்த போது சேர்ந்தமரம் காவல்நிலையத்தில் போலிசார்

வந்து என்னை விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாணை செய்ய போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi